முருகப்பெருமான் துணை

# மகான் நொண்டிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.10.2021, வெள்ளிக்கிழமை

1. அரங்கனே கலிவெல்லப் பிறந்த
ஆறுமுகப்பெருமான் அவதாரமே
வரங்கள் தந்து நல்லுலகை
வளமாக்க வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் பிலவ தரிவை திங்கள்
ஆசிபட மூவைந்து திகதி புகர் வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள், 01.10.2021, வெள்ளிக்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை நொண்டிச்சித்தர் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
வாசி வென்ற தலைவன் கூட்டம்
வணங்கி அரங்கன் அவதாரத்தில்
4. அவதாரத்தில் அற்புதம் நிகழ்த்திவர
அகிலத்தார் கண்டு தேறவே
அவதாரம் புரிந்த அரங்கன் குடிலை
அணுகியே உலகமக்களெல்லாம் வணங்கி
5. வணங்கியே சித்தர் பூசை கலந்து
வலுவான தீட்சைதனை அடைந்து
இணங்கியே ஞானிகள் காட்டும்
இணையிலா தருமத்தில் உதவி
6. உதவியே அன்னதான பலமதும்
உலகமெங்கும் பெருகும்படி செய்து
ஆதரவாய் தொடர்ந்து வந்து
அரங்கஞானி ஆசிதனை அடைந்து
7. அடைந்துமே முருகா எனும் செபதபம்
அகிலமெங்கும் வழிபாடாக பெருகும்படி
தடையற உலகோர் செய்து கொண்டு
தரணியோர் மகிழ சேவை ஆற்றிட
8. ஆற்றிட பேருலகம் அமைதியும்
ஆபத்தை வெல்லும் புதுமையும்
மாற்றம் தரும் மகிமையும் கண்டு
மண்ணுலகம் மேலவர்கள் வெளிப்பாடு

9. வெளிப்பாடு மிகுதியாகி கனிவும்
வெற்றியும் துணிவும் கூடிட
தெளிவான ஞானவான்கள் சக்தி
தேசமெங்கிலும் பரவச் செய்து

10. செய்துமே உலகம் எங்கிலும்
சேவைகள் நேருமைபட பெருகி
மெய்ஞானவான்கள் நிறைந்த தலைமை
மண்ணுலகம் சடுதி கண்டு

11. கண்டுமே ஞானிகள் ஆட்சி
கணக்காய் ஆறுமுகன் ஆசிபட
தொண்டுமிக்க ஞானவான் தலைமையில்
தெய்வீக ஞான ஆட்சி மலரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—